விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 13 வியாழன் 29.07.2021 மலர் - 2, இதழ் - 114

# தாயாய் காக்கும் தாய்மதம்




விஜயபாரதம்

அப்பாவி ஹிந்துக்களை மூளைசலவை செய்வது, பணத்தாசை, பெண்ணாசை போன்றவற்றைக்காட்டி மதமாற்றம் செய்வது நடைபெற்று வருகிறது. இதனால் ஏமாந்து மதம் மாறி, உள்ள சந்தோஷத்தையும் இழந்த பலர் மீண்டும் எப்படி தாய்மதம் திரும்புவது என குழம்புகின்றனர். அவர்களுக்கு உதவும் விதமாக பல்வேறு ஹிந்து அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அவ்வகையில் இதில் முதன்மையாக உள்ள விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு சமீபத்தில் குஜராத்தின் வாபி பகுதியில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், மதமாற்றம் செய்யப்பட்ட 21 குடும்பங்கள் தங்கள் தாய்மதமான ஹிந்து மதத்திற்கு திரும்பினர். அவர்களுக்கு மாநில அரசு கொண்டுவந்துள்ள கட்டாய மத மாற்றச் சட்டம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

**அனுபவங்கள்:**

தனது தாய்மதத்திற்குத் திரும்பியவர்கள் இதில் தங்கள் அனுபவங்களை தெரிவித்தனர். அதில் ஒருவர் கூறுகையில், தான் சேர்ந்த கிறிஸ்தவ அமைப்பு, தங்கள் சிரமங்களைத் தீர்ப்பதாக உறுதியளித்தது. இதனை நம்பி நாங்கள் பேராசையில் மதம் மாறினோம். மதம் மாறி ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன, ஆனால் எங்கள் சிரமங்கள் அப்படியேதான் இருக்கின்றன என்றார். ரோஷன் லால் என்பவர் தனது அனுபவத்தில், போதைப்பொருட்களை கொடுத்து என்னை மதமாற்றம் செய்தனர். பிறகு அச்சுறுத்தி என் சொத்துக்களை அபகரித்தனர் என்றார். அரவிந்த் என்பவர் தான் வைத்திருந்த மூலிகை மருந்து கடைக்கு அடிக்கடி வந்த கலீத், நதீம் ஆகியோர் நான் மதம் மாறினால் 10 லட்ச ரூபாய் கொடுத்து ஒரு அழகான பெண்ணை திருமணம் செய்துத் தருவதாக ஆசைகாட்டினர். ஆனால், அவர்கள் அந்த தொகையை கடைசிவரை தரவே இல்லை, திருமணமும் செய்து வைக்கவில்லை என கூறினார். அமித் என்பவர் தானும் மூளைச் சலவை செய்யப்பட்டு 2014ல் அப்துல் என முஸ்லிமாக மாற்றப்பட்டதையும் பின்னர் உண்மையை அறிந்து தாய்மதம் திரும்பியதை விவரித்தார். இதில் கலந்துகொண்ட அமித்தின் தந்தை மகனின் மாற்றத்தில் மகிழ்ச்சியடைந்தார். இதேபோல உத்தர பிரதேசத்தை சேர்ந்த மூன்று இளைஞர்களும் தாய்மதம் திரும்பினர்.

# அனைவரும் இணைய வேண்டுகோள்




விஜயபாரதம்

நமது பாரத நாட்டின் 75வது சுதந்திர தினம் 2022ல் கொண்டாடப்பட உள்ளது. இது ‘ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்’ என்ற பெயரில் கொண்டாடப்பட உள்ளது. நாடு முழுவதும் 75 இடங்களில் 75 வாரங்களுக்கு கொண்டாட்டங்கள் நடைபெறும். இதனை முன்னிட்டு நாட்டில் உள்ள அனைவரும் இந்த மகோத்சவத்தில் கலந்துகொள்வதையும் பங்கெடுப்பதையும் உறுதி செய்யுமாறு பா.ஜ.க எம்.பி.க்களை பிரதமர் மோடி கேட்டுக்கொண்டார். பா.ஜ.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்திற்குப் பிறகு ஊடகங்களுக்கு இது குறித்து விளக்கமளித்த நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், '2047ம் ஆண்டில் பாரதம் 100 ஆண்டு சுதந்திரத்தை நிறைவு செய்யும். எனவே அடுத்த 25 ஆண்டுகளுக்கு ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட வேண்டும், சிறந்த வரையறைகளை எவ்வாறு அடைவது என்பது குறித்து மக்களிடமிருந்து கருத்துக்கள் சேகரிக்கப்பட வேண்டும் எனவே, 2022 ஆகஸ்ட் 15 முதல் 2023 ஆகஸ்ட் 15 வரை ஒரு தொகுதிக்கு 75 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்படும். அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி உறுப்பினர்கள் இரண்டு பேர் செல்வார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் 75 மணி நேரம் செலவழிப்பார்கள். மக்களிடம் நாட்டின் வளர்ச்சிக்கான ஆக்கபூர்வ யோசனைகளை சேகரிப்பார்கள், இது நாட்டின் வளர்ச்சிக்காக ஒருங்கிணைக்கப்படும் என்று பிரதமர் மோடி இக்கூட்டத்தில் தெரிவித்தார்' என கூறினார்.

---

# மேலும் ஒரு பாரம்பரிய சின்னம்



விஜயபாரதம்

சீனாவின் புஜோவில் யுனெஸ்கோ உலக பாரம்பரியக் கமிட்டியின் 44 வது அமர்வின்போது, யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் தெலுங்கானாவில் காகதீயர்களால் கட்டப்பட்ட ருத்ரேஷ்வரா (ராமப்பா) கோயில் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தற்போது குஜராத்தில் ஹரப்பன் நகரத்தில் உள்ள தோலவீராவும் உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கூடுதலான இந்த பாரம்பரியச் சின்னக்கள் அறிவிப்பால் பாரதத்தின் உலக பாரம்பரிய சின்னங்களின் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது. இதற்கு பிரதமர் நரேந்திர மோடி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார். "இந்த செய்தியால் மகிழ்ச்சி அடைகிறேன். பண்டைய காலகட்டத்தில் தோலவீரா ஒரு முக்கியமான நகரமாக இருந்தது, நமது கடந்த காலத்துடனான மிக முக்கியமான இணைப்புகளில் இதுவும் ஒன்று. வரலாறு, கலாச்சாரம், தொல்பொருள் குறித்த ஆர்வம் உடைய அனைவரும் கட்டாயம் பார்க்க வேண்டிய ஒரு இடம் தோலவீரா". "குஜராத் முதல்வராக நான் இருந்தபோது, தோலவீராவில் பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புத் தொடர்பான விஷயங்களில் இணைந்து பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது. எங்கள் குழு அங்கு சுற்றுலா, உட்கட்டமைப்பை உருவாக்க பணியாற்றியது" என்று அவர் கூறினார். மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் கிஷன் ரெட்டியும் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.


# திருச்சபைகளில் தீண்டாமை




விஜயபாரதம்

ஹிந்து மதத்தில் தீண்டாமை இருப்பதாகவும் அதனால் கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறுங்கள் என்று மதமாற்றம் செய்யும் மிஷனரி கும்பல்கள் அப்பாவி ஹிந்துக்களை மதம் மாற்றிய பிறகு அவர்களுக்கான உரிமைகள் மறுத்து வருகிறது. பட்டியலின கிறிஸ்தவர்களுக்கு தனி கல்லறை, தனி சவ ஊர்தி, சர்ச்சுக்கு செல்லும் பொது வழியில் அனுமதி மறுப்பு, தங்களது பள்ளிகளில் ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பணிகளில் அனுமதி மறுப்பு, திருச்சபை நிர்வாக விவகாரங்களில் அனுமதி மறுப்பு போன்றவை தொடர்கதையாகவே உள்ளன. இவை அனைத்தும் கிறிஸ்தவத்தில் தீண்டாமை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதையே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. தற்போது தமிழகத்தில் உள்ள கிறிஸ்தவர்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமானோர் பட்டியலின சமூகத்தை சார்ந்தவர்கள். ஆனால், இங்குள்ள 18 பிஷப்களில் ஒரே ஒரு பிஷப் மட்டும்தான் பட்டியலினத்தவர். தமிழக தலித் கிறிஸ்தவர்களின் கூட்டமைப்பு இதற்காக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறது. கிறிஸ்தவர்களின் தலைமையகமான வாடிகன்வரை புகார் தெரிவித்தும் நடவடிக்கை இல்லை என பட்டியலின கிறிஸ்தவர்கள் வருந்துகின்றனர். இந்நிலையில், கிறிஸ்தவத்தில் கத்தோலிக்க தேவாலயங்களில் நிலவும் இந்த தீண்டாமை குறித்தும் அதற்காக வரும் 26ல் போராட்டம் நடத்துவது குறித்தும் தமிழக தலித் கிறிஸ்தவர்களின் கூட்டமைப்பு சார்பாக சமீபத்தில் போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளது.

# கீழடியில் சூரியன் சந்திரனுடன் நாணயம்

விஜயபாரதம்

சிவகங்கை மாவட்டத்தில் வைகை நதியோரம் கீழடியில் நடைபெற்று வரும் அகழாய்வின் ஒரு பகுதியாக, கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கிய ஏழாம் கட்ட அகழாய்வு, கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய இடங்களில் நடந்து வருகிறது. இந்த அகழாய்வில் ஏற்கனவே தங்கத்தால் ஆன பல்வேறு பொருள்கள் கிடைத்தன. தற்போது சூரியன், சந்திரன், விலங்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்ட சதுர வடிவ வெள்ளி நாணயம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது முத்திரை நாணயமாக இருக்கலாம் என்று அகழாய்வாளர்கள் கருதுகின்றனர். இதன் பயன்பாடு, காலம் உள்ளிட்டவற்றை அறிய ஆய்வுக்காக அனுப்பப்பட உள்ளது.

# கோயில் திறப்பு

தமிழகம் முழுவதும் அனைத்து கோயில்களும் திறக்கப்பட்ட பின்பும் மத்திய சென்னை மாவட்டம் வில்லிவாக்கம் தொகுதியில் அமைந்துள்ள அகத்தீஸ்வரர் திருக்கோயில் திறக்கப்படாமல் இருந்தது. பக்தர்களின் கோரிக்கையை ஏற்று நேற்று இந்து முன்னணியினர் எடுத்த நடவடிக்கையின் பேரில் கோயில் திறக்கப்பட்டு பக்தர்கள் தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. விஜயபாரதம்



# ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம்

பாரதத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழ் 6.51 கோடி நபர்களுக்கு 2020 - 21ம் ஆண்டில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால், 130.9 கோடிக்கும் அதிகமான மனித நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நடப்பு 2021 - 22ம் ஆண்டில் 25 லட்சத்துக்கும் அதிகமானச் சொத்துகள் இத்திட்டத்தின் கீழ் இதுவரை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 2021 ஜூலை 23 வரை, தமிழகத்தில் 54.99 லட்சம் நபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பணியாளர்களுக்கான ஊதியத்தை சரியான நேரத்தில் வழங்குவதற்காக NeFMS'ஐ மத்திய அரசு செயல்படுத்தியுள்ளது. இந்தக் உடனடி பணம் செலுத்தும் முறையை 25 மாநிலங்கள், மூன்று யூனியன் பிரதேசங்கள் செயல்படுத்தி உள்ளன. தமிழகத்தை பொறுத்தவரை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழ், 2018 - 19ம் ஆண்டு ரூ 4951.66 கோடியும், 2019 - 20ம் ஆண்டு ரூ 5447.80 கோடியும், 2020 - 21ம் ஆண்டு ரூ 8941.26 கோடியும் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டில் ரூ. 73 ஆயிரம் கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 2020 - 21 ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது ரூ. 11,500 கோடி அதிகம். விஜயபாரதம்



# ரோஹிங்கியாக்கள் கைது



விஜயபாரதம்

வங்க தேசத்தில் வசிக்கும் ரோஹிங்கியா அகதிகள் மூவரை சட்டவிரோதமாக பாரதத்திற்கு அழைத்து வந்து டெல்லியில் தங்க வைப்பதற்காக அழைத்துச் சென்ற நூர் இஸ்லாம் உட்பட மூன்று பேரை உத்தரபிரதேச பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு காவல்துறையினர் கைது செய்தனர். அவர்களை விசாரித்ததில் அந்த மூவரையும் அழைத்து செல்ல டெல்லி ரயில் நிலையத்தில் காத்திருந்த ஒருவர் உட்பட மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர். நூர் இஸ்லாம் இதற்கு முன்பு திரிபுரா எல்லையில் பணிபுரிந்துகொண்டிருந்த வங்க தேசத்தவர் என்பதும் அவர் சட்டவிரோதமாக மக்களை கடத்தி, பாரதத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பும் பணியை செய்துவந்தவர் என்பதும் விசாரணையில் தெரியவந்தது.



விஜயபாரதம்

# கர்நாடக புதிய முதலமைச்சர்

கர்நாடக முதலமைச்சராக இருந்த எடியூரப்பா தனது பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து கர்நாடகத்தின் அடுத்த முதலமைச்சர் யார்? என்ற பெரிய எதிர்பார்ப்பு மக்களிடம் ஏற்பட்டது. இந்நிலையில் பா.ஜ.கவின் எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் பெங்களூருவில் நடைபெற்றது. இதில் எடியூரப்பா, மேலிட பொறுப்பாளர்களான அருண்சிங், தர்மேந்திர பிரதான், கிஷன்ரெட்டி, சி.டி.ரவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதில் கட்சியின் புதிய முதலமைச்சராக பசவராஜ் பொம்மை ஒருமனதாக தேர்ந்து எடுக்கப்பட்டார். இதனை எடியூரப்பா அறிவித்தார். பின்னர் கவர்னரிடம் ஆட்சியமைக்க உரிமை கோரப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட கவர்னர் தாவர்சந்த் கெலாட், ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்தார். இதையடுத்து நேற்று காலை 11 மணிக்கு பெங்களூருவில் உள்ள கவர்னர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் கர்நாடக புதிய முதலமைச்சராக பசவராஜ் பொம்மை பதவி ஏற்றார். புதிய அமைச்சர்கள் பதவி ஏற்பு விழா அடுத்த ஒரு வாரத்திற்குள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# எல்லையில் சென்சார்கள்



விஜயபாரதம்

சீனாவின் முரட்டுப் பிடிவாதம், எல்லைகள் ஆக்கிரமிப்பு மனப்பான்மை போன்றவற்றால் தற்போதைய சூழ்நிலையில் பாரத சீன எல்லையில் முழு படைவிலக்கம் என்பது சாத்தியமில்லை என்பதாகவே தெரிகிறது. சீனா எல்லைப்பகுதிகளில் விமான தளம், ராணுவ தங்குமிடங்கள் போன்றவற்றை அமைத்து வருகிறது. இதனையடுத்து நமது படைகளும் உஷார்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சீன ஊடுருவலை தடுக்கும்பொருட்டு நமது பாரத ராணுவம் தற்போது மோஷ சென்சிடிவிடி காமிராக்கள், சென்சார்களை நிறுவி வருகிறது. இதன் மூலம் சீனப்படைகளின் நடமாட்டங்களை கவனிக்க முடியும்.

# டிராக்டரை கடத்திய ராகுல்




விஜயபாரதம்

**வே**ளாண் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் விவசாய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் கடந்த திங்கட்கிழமை அன்று காங்கிரஸ் தலைவர்ராகுல்காந்தி டிராக்டரில் நாடாளுமன்றம் வந்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்நிலையில், டெல்லிக்குள் பாதுகாப்பை மீறி அந்த டிராக்டர் எப்படி கொண்டுவரப்பட்டது என்பது விசாரணைப் பொருளானது. இது குறித்த முதற்கட்ட விசாரணையில், டிராக்டர் ஒரு கண்டெய்னர் லாரியில் மறைத்து கொண்டு வந்துள்ளனர். காவல்துறை அந்த லாரியை வழயில் மடக்கி விசாரித்தபோது, ஒரு காங்கிரஸ் தலைவரின் கடிதம் காவலர்களிடம் கொடுக்கப்பட்டது. அதில், கண்டெய்னரில் நாடாளுமன்ற அலுவல் சம்பந்தப்பட்ட முக்கிய பொருட்கள் உள்ளன என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து லாரியை சோதனை செய்யாமல் காவலர்கள் அனுப்பிவிட்டனர். பின்னர் நாடாளுமன்றத்தின் அருகில் உள்ள காங்கிரசை சேர்ந்த ராஜ்யசபா உறுப்பினர் கே.டி.எஸ் துளசியின் அலுவலகத்தில் டிராக்டர் ரகசியமாக பதுக்கிவைக்கப்பட்டது. போராட்டத்திற்கு வசதியாக சில மாற்றங்கள் டிராக்டரில் அங்கேயே செய்யப்பட்டது என்பது தெரியவந்துல்ளது. நாட்டின் பெரிய எதிர்கட்சியின் தலைவரான ராகுல் காந்தி, சட்டத்தையும் காவல்துறையையும் ஏமாற்றியுள்ளார். தடைசட்டம் 144ஐ மீறி நாடாளுமன்றத்தில் டிராக்டரை ஓட்டிவந்தார் என்பதும் இதனால் தெளிவாகியுள்ளது. இவர் எல்லாம் எப்படி நாட்டை காப்பாற்றுவார் என நெட்டிசன்கள் கேள்வி கேட்டு வருகின்றனர்.

# புலம்பும் மல்லையா



விஜயபாரதம்

**நா**ன் வாங்கிய 6,200 கோடி ரூபாய் கடனுக்காக இரு மடங்குக்கு மேலாக 14 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள என் சொத்துக்களை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது. அமலாக்கத் துறையிடம் பணத்தை திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்பதால் வங்கிகள் என்னை திவாலாகும்படி கோருகின்றன என புலம்பித் தீர்த்துள்ளார் பாரத வங்கிகளில் பல ஆயிரம் கோடி ரூபாய் கடன் பெற்று அதை திருப்பி செலுத்தாமல் வெளிநாடு தப்பிச்சென்ற தொழிலதிபர் விஜய் மல்லையா. ஆனால், அவர் பெற்ற கடனுக்கான வட்டி என்ன ஆயிற்று, அரசு செய்த வழக்கு செலவுகள், இதற்காக அரசு அதிகாரிகள் சென்று வந்த செலவு எல்லாம் யார் கொடுப்பது. இதை கணக்கிட்டால் அவர் தரவேண்டியது இன்னும் அதிகமாக இருக்கும் என இணையதளவாசிகள் சமூக வலைத்தளங்களில் கிண்டலடித்து வருகின்றனர்.

# வங்கதேசத்திற்கு உதவும் பாரதம்

நமது அண்டை நாடான வங்க தேசத்தில் கொரோனா அலை தீவிரமாகி உள்ளதையடுத்து அதற்கு அத்தியாவசியத் தேவையான ஆக்ஸிஜனை மத்திய அரசு இலவசமாக அனுப்பி வருகிறது. கடந்த பக்ரீத் பண்டிகையின்போது முதலாவதாக 180 டன் மருத்துவ ஆக்ஸிஜன் அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தற்போது ரயில் மூலமாக இரண்டாவது ஆக்ஸிஜன் எக்ஸ்பிரஸ் 580 மெட்ரிக் டன் ஆக்ஸிஜனை சுமந்துகொண்டு மேற்கு வங்கத்திற்கு சென்றது. முன்னதாக கொரோனா தொற்றுப் பரவலை முன்னிட்டு வங்க தேசத்திற்கு, நமது பாரத அரசு உயிர் காக்கும் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், கொரோனா தடுப்பூசி உள்ளிட்டவைகளை தொடர்ந்து இலவசமாக வழங்கி வருகிறது.

விஜயபாரதம்



# தலிபான்களுக்கு உதவும் பாகிஸ்தான்

அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து விலக ஆரம்பித்ததை அடுத்து அதனை சாதகமாக பயன்படுத்தி தலிபான்கள் ஆக்கிரமித்து வருகின்றனர். இதனை தனக்கு சாதகமாக்கிக்கொண்ட பாகிஸ்தான், தலிபான்களுக்கு ஆதரவாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகளை அனுப்பிவைத்துள்ளது. இதில் சுமார் 6,000 தெஹ்ரீக்இதலிபான் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தற்போது ஆப்கானிஸ்தானில் தலிபான் சார்பாக போரிட்டு வருகின்றனர். இவர்கள் காபூல், காந்தஹார் போன்ற முக்கியமான இடங்களில் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையை உருவாக்க சோதனைச் சாவடிகளைப் கைப்பற்றுகின்றனர். இவர்கள் பலுசிஸ்தான், சிந்து வழியாக ஆப்கனுக்குள் நுழைந்துள்ளனர். பிராந்தியத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தும் விதமாக பாகிஸ்தான் தலிபான்களுக்கு உதவுகிறது என ஆப்கன் அரசு குற்றம் சாட்டியுள்ளது.

விஜயபாரதம்



# அல்பேனியாவுடன் ஃபைசரின் ஒப்பந்தம்



விஜயபாரதம்

கொரோனா தடுப்பு மருந்தை தயாரிக்கும் நிறுவனங்களில் ஒன்று அமெரிக்க நிறுவனமான ஃபைசர். அதன் பையோ என்டெக் தடுப்பூசியின் நீண்டகால செயல் திறன், அதன் பின்விளைவுகள் குறித்த எந்த ஒரு சரியான அறிக்கையும் இன்றுவரை வெளியிடப்படவில்லை. இந்நிலையில், அல்பேனிய அரசுடன் அந்த நிறுவனம் போட்ட ரகசிய ஒப்பந்தத்தை டுவிட்டரில் வெளியானது. இதனை இந்தியாவின் ஐபி அதிகாரி ஒருவரும் மேற்கோள் காட்டியுள்ளார். அந்த ஒப்பந்தத்தில், 'ஃபைசரின் பையோ என்டெக் கொரோனா தடுப்பு மருந்தால் ஏற்படும் பக்க விளைவுகளுக்கு ஃபைசர் பொறுப்பேற்காது. இதைவிட சிறந்த தடுப்பு மருந்து வேறு எதையாவது வாங்க அல்பேனிய அரசு முடிவு செய்தாலும் ஃபைசருடனான ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியாது. தாமதம், குறைபாடு , சேவை புகார்களை காரணமாகக் காட்டி ஆர்டரை ரத்து செய்ய முடியாது. ஆனால், பணம் தரவில்லை என்றால் ஃபைசர் ஆர்டரை ரத்து செய்யும். அல்பேனிய அரசின் எந்த ஒரு சட்டமும் ஃபைசரை கட்டுப்படுத்தாது. வாங்கிய மருந்துகளை எக்காரணம் கொண்டும் அரசு திருப்பி அனுப்பக்கூடாது' என்பது உள்ளிட்ட பல ஷரத்துகள் இடம்பெற்றுள்ளன.

# சீனாவுக்கு தலைவலி ஆரம்பம்


விஜயபாரதம்

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் (யு.என்.எஸ்.சி) வெளியிட்டுள்ள அறிக்கையில், கிழக்கு துர்கிஸ்தான் இஸ்லாமிய இயக்கத்தின் (ஈ.டி.ஐ.எம்) நூறு உறுப்பினர்கள், சீனாவில் உள்ள உய்குர் முஸ்லிம்களுக்காக போராடும் உய்குர் பிரிவினைவாத குழுவுக்கு ஆதரவாகவும் சின்ஜியாங்கின் விடுதலைக்காகவும் ஆப்கானிஸ்தானின்பல மாவட்டங்களில்தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர் என கூறப்பட்டுள்ளது. ஐ.நா. பகுப்பாய்வு ஆதரவு மற்றும் பொருளாதாரத் தடைகள் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையின்படி இந்த குழு ஆப்கானிஸ்தானின் படாக்ஷன், ஃபரியாப், காபூல், நூரிஸ்தான் மாகாணத்தில் செயல்பட்டு வருகிறது. ஜமாஅத் அன்சாருல்லா, கதிபா அல் தவ்ஹீத் வால்ஜிஹாத் ஆகிய பயங்கரவாத அமைப்புகளுடன் இக்குழு தொடர்பில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. உய்குர் பிரிவினைவாதக் குழுவினர் சமீபத்தில் தங்கள் போர் தயார்நிலையை நிரூபிக்கும் ஒரு பிரச்சார வீடியோவை வெளியிட்டனர். இக்குழு ஆப்கானிஸ்தானில் இருந்து சீனாவுக்கு பயங்கரவாதிகளை நகர்த்த உதவுகிறது. இதற்கிடையே, ஆப்கானிஸ்தானின் பகுதிகள் சீனாவுக்கு எதிராக பயன்படுத்த அனுமதிக்கப்படாது, சீனர்களின் ஆப்கன் முதலீடுகள் பாதுகாக்கப்படும் என்று தலிபான்கள் சீனாவுக்கு உறுதியளித்துள்ளனர்.

# அறநிலையத்துறை இணையதளத்தில் உழவாரப்பணி



விஜயபாரதம்

ஹிந்து கோயில்களில் உழவார பணிகள் மேற்கொள்ள விரும்புவோர், அறநிலையத் துறை இணைய தளத்தின் வாயிலாக பதிவு செய்யும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. இதன்படி, உழவாரப் பணியில் ஈடுபட விரும்புவோர் ஹிந்து சமய அறநிலையதுறையின் http://hrce.tn.gov.in என்ற இணையதளத்தில் இ சேவைகள் பகுதிக்கு செல்ல வேண்டும். அதில் உழவாரப்பணியை தேர்வு செய்ய வேண்டும். பின், கோயில்கள் பட்டியலில் விருப்பமான கோயில், பணி செய்வதற்கு உகந்த தேதி, நேரத்தை தேர்வு செய்ய வேண்டும். முன்பதிவு செய்யப்படாத சீட்டை தேர்வு செய்து, தொண்டு செய்ய விரும்புவோரின் விபரங்களை பூர்த்தி செய்ய வேண்டும். அதன்பின், பதிவு செய்யப்பட்ட மொபைல் போன் எண்ணிற்கு வரும், ஓ.டி.பியை பதிவு செய்தால் அனுமதி சீட்டு வரும். அதை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முதல் கட்டமாக 47 முதுநிலை கோயில்களில் இச்சேவை துவக்கப்பட்டுள்ளது.

# வலையில் சிக்கிய மீம்கள்



அந்தஸ்தை விட
மனிதநேயம் சிறந்தது!!!



இந்தியாவின் தூய்மையான மாநிலங்களில் கேரளா முதலிடம்
- செய்தி

